# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

அண்ணன் துறைமுகம் காஜா அவர்களை நம் தலைவர் அவர்கள் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். அரசுப் பொறுப்பிலும் துறைமுகம் காஜா அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர். அப்படிப்பட்ட அண்ணனின் இல்ல திருமணத்துக்கு வந்திருப்பதில், நமக்கெல்லாம் உள்ளபடியே மிகப்பெரிய பெருமை.

**இஸ்லாமியர்களுடனான உறவு யாராலும் பிரிக்க முடியாது!**

இந்த விழாவில் இஸ்லாமிய பெருமக்கள் பலபேர் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை, நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன நடந்தாலும், இன்றைக்குச் சில பேர் சோஃபா வந்த உடனே நம்மை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள், ஆனால், நீங்கள் அத்தனை பேரும் நாங்கள் என்றைக்கும் கழகத்துடன் இருப்போம் என்று உறுதியோடு வந்திருக்கிறீர்கள். ஏன்னென்றால் இஸ்லாமியர்களுக்கும் கழகத்துக்குமான அந்த உறவை யார் நினைத்தாலும் பிரிக்க முடியாது, யார் என்ன சொன்னாலும், எந்த அவதூறுகளைப் பரப்பினாலும் சிறுபான்மை மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் கழகம் என்றைக்குமே ஒரு காவல் அரணாக நிச்சயம் இருக்கும். உங்களோடு நம் தலைவர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகமும் உறுதுணையாக நிற்கும் என்று கூறிக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த அரசியல் பேரிடர் காலத்திலும் நம் தமிழ்நாட்டை, நம் திராவிட முன்னேற்றக் கழகம், நம் தலைவர் அவர்களும் நிச்சயம் உங்களுக்காக நின்று காப்போம், தமிழ்நாட்டை மீட்போம் என்று கூறி, மணமக்களுக்கு மீண்டும் உங்களின் அத்தனை பேரின் சார்பாக என் வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி நாசர், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தலைவர் நெல்லை முபாரக், டி.கே.எஸ். இளங்கோவன், திருப்பூர் அல்தாஃப், முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கு.பிச்சாண்டி, தங்கம் தென்னரசு தா.மோ. அன்பரசன், ராஜகண்ணப்பன், மதிவேந்தன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, தாயகம் கவி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சுந்தர், கோ.தளபதி, மயிலை வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டமன்ற உறுப்பினர் மனோஜ்பாண்டியன், கருணாநிதி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கிருஷ்ணசாமி, துணை மேயர் மகேஷ்குமார், `பூச்சி' முருகன், காசி முத்துமாணிக்கம், மருத்துவர் சுபேர் கான், பூவை ஜெரால்டு, செந்தில்வேல், பத்மநாபன், பகுதிச் செயலாளர் நாராயண பிரசாத், மாநகரச் செயலாளர் பிரகாஷ், நகரச் செயலாளரும், நகராட்சித் தலைவருமான மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## பனையூர் சந்தை

**சனிக்கிழமை தோறும்**
**பனையூரில்**
**கூடுகிற**
**பழைய பொருள்**
**சந்தைக்கு**

**ராஜினாமா**
**உருப்படிகள்**
**சகிதமாக**

**கும்பல் கும்பலாக வந்து**
**குவிகிறது**
**குட்கா சரக்குகளும்**
**அடங்காத**
**கோடிக் கனவு**
**மிடுக்குகளும்.**

**என்னநாஞ்**
**சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

ED யை வைத்து பா.ஜ.க. செய்ததை – காவல்துறையை வைத்து த.வெ.க. செய்கிறது!

# குதிரை பேரத்தில் ஈடுபட்ட விஜய் அரசின் மூக்கு அறுபட்டது!

## தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் பேட்டி!



சென்னை, ஜூலை 6

காவல்துறை மூலம் அடக்கு முறையை ஏவி விடும் த.வெ.க. அரசிற்கு எதிராக சட்டத்துறை இணைச்செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களது பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குதிரை பேர குற்றச்சாட்டை சுமத்தி மக்கள் மத்தியிலே தி.மு.க. மீது அவதூறு பரப்ப வேண்டும் என்ற த.வெ.க. அரசின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

**சிறைக்கு அனுப்ப வேண்டிய முகாந்திரம் இல்லை!**

நேற்று எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் வழக்கின் மூலமாக நீதிமன்றத்தால் விஜய் அரசினுடைய மூக்கு அறுக்கப்பட்டிருக்கிறது. இது பொய்யான வழக்கு இந்த வழக்கில் இவரை கைது செய்து சிறைக்கு அனுப்ப வேண்டிய முகாந்தரம் இல்லை என்ற அடிப்படையில் நேற்றைக்கு அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததன் மூலம், முதல் முறையாக இந்த குதிரைபேர சர்க்கார் மூக்கறுக்கப்பட்டுள்ளது.

**நிர்வாகத்தை பற்றி கவலைப்படாத த.வெ.க. அரசு!**

ஆட்சிக்கு வந்து 55 நாட்களைக் கடந்தும் நிர்வாகத்தைப் பற்றி கவலைப்படாத த.வெ.க. அரசு தினந்தோறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது எந்த குற்றங்களை சுமத்தலாம் என்று சிந்தித்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதையை அரங்கேற்றி வருகிறார்கள். அந்த வகையில்தான் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் மீது ஒரு அவதூறு வழக்கு. அவதூறு வழக்குப் போடுவதில் கைது செய்ய வேண்டிய அவசியம் கிடையவே கிடையாது. முன்ஜாமீன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட ஒரே காரணத்திற்காக அவசர அவசரமாக ஓடி வந்து அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை காவல்துறை கைது செய்வதனுடைய பின்னணி என்ன.? எதற்கு ஒரு அவதூறு வழக்கில் கைது செய்தவரை 6 மணி நேரம் 7 மணி நேரம் காவல்துறை விசாரணை செய்தது.? அது என்ன மர்மம்.?

**எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய வற்புறுத்தினர்!**

அந்த விசாரணையின் போது அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களை எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யுங்கள் த.வெ.க.வில் இணைய பணம் தருகிறோம்" என கட்டாயப்படுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார். இது ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டு. 6 மணி நேர விசாரணை இதற்காக தான் நடந்துள்ளதா.?

பா.ஜ.க. எப்படி ED யை விட்டு மிரட்டி கட்சியில் சேர்க்கிறார்களோ அதேபோலத் தான் காவல்துறையை வைத்து மிரட்டி கட்சிக்கு ஆள் சேர்க்கும் வேலையை த.வெ.க. அரசு செய்கிறது.

**அமைச்சர் நிர்மல்குமார் மீது 420 வழக்கு!**

இந்த உண்மை வெளிப்பட்ட உடன் பதறிப் போய் நேற்று இரவு 9 மணிக்கு சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் ஒரு பேட்டி கொடுக்கிறார். பேட்டியில் முறையான விளக்கம் கொடுத்தால் பரவாயில்லை. ஆனால் அவர் என்ன சொல்கிறார் தனி நபர் அவதூறு செய்கிறார். உடல் கேலி செய்கிறார். எங்களின் எம்.எல்.ஏ.வை ரௌடி எனக் கூறுகிறார். இப்படி எல்லாம் சொல்லும் நிர்மல் குமார் மீது உக்கரபாண்டியன் என்பவர் உசிலம்பட்டியில் நில மோசடி செய்தார் நிர்மல் குமார் என 420 புகார் கொடுத்துள்ளார். இந்த 420 நிர்மல் குமார் வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்து ரவுடி என்றெல்லாம் சொல்ல எந்த அருகதையும் இல்லை.

**அவதூறாகப் பேசும் ஆதவ் அர்ஜூனா!**

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, கரூரில் நடந்த சம்பவத்தை குறிப்பிட்டு மக்களை கொன்று குவித்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம், கொன்று குவித்தவர் என்று எங்கள் தலைவருடைய பெயரை சொல்றார். இது எந்த விதத்தில நியாயம்? இப்படி அவதூறாகப் பேசக்கூடிய இந்த ஆதவ் அர்ஜுனா ஏன் கைது பண்ணாம இன்னும் வேடிக்கை பார்த்திட்டு இருக்கிறது காவல் துறை.

**குற்றவாளிகள் நிரம்பிய த.வெ.க. அமைச்சரவை!**

யாரை ரவுடின்னு சொல்றாரு நிர்மல் குமார் நிதித்துறை அமைச்சராக இருக்கிறாரே மரிய வில்சன் அவர் மீது வீடு புகுந்து தாக்கி கொலை மிரட்டல் விடுத்த வழக்கு உள்ளது. அந்த வழக்குத் தொடர்பாக இன்று புதுச்சேரி நீதிமன்றத்தில் அவரை ஆஜராகச் சொல்லி சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. அதேபோல ஒரு மினிஸ்டர் மீது பவுடர் குற்றச்சாட்டு இருக்கிறது. ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் மீதுப் பாதிக்கப்பட்ட பெண் அளித்த குற்றச்சாட்டு இருக்கிறது. அமைச்சர் நிர்மல் குமார் மீது 420 புகார் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தலைமை அமைச்சரா இருக்கக்கூடிய விஜய் அவர்கள் மீது குதிரைபேர ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி இருக்கிறோம். இப்படி கிரிமினல் பின்னணி கொண்ட கேபினட்டாக, குற்றவாளிகள் நிரம்பிய கேபினட்டாக த.வெ.க. அமைச்சரவை இருக்கிறது. இப்படிப்பட்ட த.வெ.க. அரசாங்கம் திராவிட முன்னேற்ற கழகத்தை பார்த்து கேள்விக் கேட்பதற்கு துளியும் அருகதை இல்லை.

நேற்றைக்கு அ.தி.மு.க.வை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் முன்னால் அமைச்சர் ஓஎஸ் மணியன் 'விஜய பாஸ்கர் அமைச்சர் பதிவி வாங்கித்தருவதாக பேரம் பேசினார்' என கூறி இருக்கிறார். யார் இந்த குதிரை பேரத்தை செய்து கொண்டு உள்ளார்கள் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

**அடிப்படை புரிதல் கூட இல்லாத த.வெ.க. அமைச்சர்கள்!**

திராவிட முன்னேற்ற கழகம் வென்று இருக்கிறது 59 இடங்கள். ஒரு எம்.எல்.ஏ., இரண்டு எம்.எல்.ஏ. வை விலைக்கு வாங்கி எப்படி ஆட்சி அமைக்க முடியும் இந்த அடிப்படை புரிதல் கூட இல்லாமல் த.வெ.க. அமைச்சர்கள் எல்லாம் பேசுவது வடிகட்டியே பொய். திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய நிர்வாகிகள் மீது குற்றம் சுமத்த வேண்டிய நோக்கத்திற்காக மட்டுமே கூறப்படும் குற்றச்சாட்டு.

ஆட்சி அதிகாரத்தில் உட்கார்ந்து தினம் தினம் அரசு நிர்வாகத்தை கவனிக்க துப்பில்லை. நிர்வாகம் தேங்கிக் கிடக்கிறது. ஆட்சிக்கு வந்து 56 நாளாகிறது. இதுவரைக்கும் மக்களுக்கான வேலை என்ன செய்துள்ளது இந்த அரசு.?

**அரசின் குறைகளை சுட்டிக்காட்டினால் கைது!**

குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அமைச்சர்கள் மீது எல்லாம் நடவடிக்கை எடுக்க துப்பில்லை. சமூக வலைதளத்தில் அரசின் குறைகளை சுட்டிக்காட்டி செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஆர்.ஜே.சரண் ஜெயராமன் போன்ற தம்பிகளை எல்லாம் பொய் காரணம் சொல்லி கைது செய்து கொண்டுள்ளனர். தி.மு.க. மீது அவதூறுகளை பரப்பி பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து , மேயர் பிரியா உள்ளிட்ட கழக மகளிர் நிர்வாகிகளை கொச்சையாகப் பேசிவரும் த.வெ.க. ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தீர்களா.?

**தமிழ்நாட்டு அரசியலின் மாண்பை சிதைத்துவிட்டது த.வெ.க.!**

மாற்றம் கொடுப்போம் என்று சொல்லிவிட்டு ஆட்சிக்கு வந்து அ.தி.மு.க. கட்சியில் இருப்ப வரை த.வெ.க. கட்சியில் சேர்க்கும் கட்சி மாற்றம் தான் நடந்துள்ளது. இன்னும் பலரை ராஜினாமா செய்ய வைத்து ஆளும் கட்சியில் இணைக்கும் முயற்சியில் தான் இந்த அரசு உள்ளது. இவற்றை எல்லாம் விட்டுவிட்டு வரக்கூடிய திங்கட்கிழமையில் இருந்தாவது மக்கள் பணியில் ஈடுபடுங்கள்.

இந்தியாவிற்கு முன் மாதிரியாக இருந்த தமிழ்நாட்டு அரசியலின் மாண்பை சிதைத்து, ஒரு மோசமான அரசியலை முன்னெடுத்து வருகிறது இந்த த.வெ.க. அரசு. ஒரு அரசியல் கட்சி எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு மிகப்பெரிய உதாரணம் த.வெ.க.

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது! பெரும்பாறை அருகே

# ரூ.2 கோடியில் சுற்றுலா - மேம்பாட்டுப் பணிகள் நிறுத்தம்!

## மலைவாழ் மக்கள் போராட்டம் நடத்த முடிவு!

திண்டுக்கல், ஜூலை 6-

பெரும்பாறை அருகே புல்லாவெளி அருவி பகுதியில் ரூ.2 கோடியில் நடைபெற்று வந்த மேம்பாட்டு பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் அப்பகுதி மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தின் பெரும்பாறை, கல்லாங்கிணறு, தடியன்குடிசை உள்ளிட்ட மலைக் கிராமங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் மழைநீர், குடகனாறு ஆற்றில் நீண்ட தூரம் பயணித்து புல்லாவெளி என்ற இடத்தில் அருவியாக பாய்கிறது. பெரும்பாறை அருகேயுள்ள மஞ்சள்பரப்பு என்ற இடத்திலிருந்து, சுமார் 500 அடி தூரத்தில் இந்த எழில் மிகு அருவி அமைந்துள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் மலையடிவார பகுதியில் உள்ள சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் இந்த அருவிக்கு வருகை தந்து இதன் அழகை ரசிப்பதுடன், அருவியில் குளித்து மகிழ்வதை வழக்கமாக வைத்திருந்தனர்.

இந்த அருவியின் தண்ணீர் விழும் பகுதிக்கு சென்று குளிப்பதற்கு, போதிய பாதை வசதி இல்லாமல் இருந்தது. பின்னர் இந்த அருவியில் நடந்த மேம்பாட்டு பணிகளின் ஒருபகுதியாக, தண்ணீர் விழும் பகுதிக்கு செல்ல இரும்பு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. இதில் சுற்றுலா பயணிகள் சென்று குளித்து மகிழ்ந்து வந்தனர்.

இதற்கிடையே கடந்த தி.மு.க. ஆட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அருவியில் மேம்பாட்டு பணிகள் துவங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி துவங்கிய பணிகள், விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இந்த மேம்பாட்டு பணியின் கீழ் சுற்றுலா பயணிகளுக்கான உடைமாற்றும் அறை, கழிப்பறை, கார் பார்க்கிங், அருவிக்கு செல்லபடிக்கட்டு கள், பாதுகாப்பாக குளிப்ப தற்கு இரும்பு தடுப்பு வேலி உள்ளிட்ட பணிகள் நடந்தது. இந்நிலையில் அருவி விழும் பகுதி, கன்னிவாடி வனத்துறைக்கு சொந்தமானது என்று கூறிய வனத்துறையினர், அங்கு நடைபெற்ற மேம்பாட்டு பணிகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மலைகிராம மக்கள் கூறியதாவது: கடந்த திமுக ஆட்சியில் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள புல்லாவெளி அருவி மேம்படுத்தப்பட்டு, பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி புல்லாவெளி அருவியை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலாதுறை சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளுக்கான மேம்பாட்டு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வந்தன.

இந்த அருவியின் அழகை ரசிக்க வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக இரும்பு படிக்கட்டுகள், பூங்கா, வாகனங்கள் நிறுத்துமிடம், கழிப்பறை, அருவியில் பாதுகாப்பாக குளிக்கும் வசதி, உடை மாற்றும் அறைகள் உள்ளிட்ட பணிகள் நடந்து வந்தன.

இந்நிலையில் வனத் துறையினர் இந்த பணிகளுக்கு தடை விதித்துள்ளனர். இந்த பணிகள் முடிவுற்ற பின்பு அதிகளவில் சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள். இதன்மூலம் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். வாழ்வாதரமும் உயரும். இதுமட்டுமின்றி இங்கு விளையும் பொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும். இந்த அருவி சுற்றுலா மையமானால் எங்களது வாழ்க்கை தரம் உயரும்.

இப்பகுதியில் விளையும் மிளகு, ஏலம், காபி போன்றவற்றை சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்கும் போது இதன் மதிப்பும் உயரும். எங்கள் வாழ்வும் உயரும் என்ற எண்ணத்தில் இருந்தோம்.

ஆனால் தற்போது தமிழக அரசு இதனை முடக்கும் நோக்கு டன் செயல்பட்டுள்ளது. எனவே தமிழக முதல்வர் வனத் துறையினரிடம் அறிவுறுத்தி, புல்லாவெளி அருவி பகுதியில் மேம்பாட்டு பணிகளை முழுமையாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் எங்கள் தரப்பில் போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு கூறினர்.

சூறைக்காற்றால் கடலுக்கு மீனவர்கள் செல்ல தடை;

# ராமேஸ்வரம் - மண்டபத்தில் 3,500 படகுகள் கரைநிறுத்தம்!

## 10 ஆயிரம் மீனவர்கள் வேலை இழப்பு

ராமேஸ்வரம்,ஜூலை 6-

சூறைக்காற்று காரணமாக ராமேஸ்வரம் பகுதியில் 3,500 படகுகள் கரை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. இதனால் 10 ஆயிரம் மீனவர்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டம், பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா ஆகிய இரு கடற்பகுதியிலும் சூறைக்காற்று மணிக்கு 40 முதல் அதிகபட்சமாக 60 கிமீ வேகம் வரையிலும் வீசும் என அறிவிக்கப்பட்டது. இதனால், திடீரென ராட்சத அலைகள் எழும் என்பதால், மீனவர்கள் யாரும் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம், மீன்வளத்துறை எச்சரிக்கை அறிவிப்பு செய்தது. இதனால் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடல்பகுதிக்கு ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தேவிப்பட்டினம், தொண்டி, எஸ்பி.பட்டினம் உள்ளிட்ட மீன்பிடி துறைமுகங்களில் இருந்து நேற்று கடலுக்கு செல்ல மீன்பிடி அனுமதி டோக்கன் வழங்கவில்லை.

இதன்படி மண்டபத்தில் 600, பாம்பனில் 150, ராமேஸ்வரத்தில் 750 என மொத்தம் 1,500 விசைப்படகுகள் நேற்று கரைநிறுத்தம் செய்யப்பட்டன. இதேபோல் 2,000 நாட்டுப்படகுகளும் கரை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. 10 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் வீடுகளில் முடங்கியுள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை விலகிய பிறகே மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதி அளிக்கப்படும் என மீன்வளத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் காமராஜர் அணை வறண்டது!

திண்டுக்கல், ஜூலை 6-

திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் காமராஜர் அணை மேற்கு தொடர்ச்சி மலை அடி வாரத்தில் அமைந்துள்ளது.

இந்த அணையின் மொத்த உயரம் 23.6 அடியாகும். தற்போது அணையின் நீர்மட்டம் பூஜ்ஜியத்திற்கும் குறைவானச்சென்று மைனஸ் 4 அடியாக இருக்கிறது.

பெரும்பாறை, மஞ்சள் பரப்பு உள்ளிட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீர்பிடிப்புப் பகுதிகளில், மழையேதும் இல்லாத காரணத்தினால், அணைக்கு நீர் வரத்து முற்றிலுமாக இல்லாமல் இருக்கிறது.

இதேபோல் புல்லாவெளி நீர்வீழ்ச்சியிலிருந்து குடகனாறு வழியாக அணைக்கு தண்ணீர் மிக குறைவான அளவில் மட்டுமே வருகின்றது. இதன்படி நீரின்றி பரிதாப நிலையில் இருக்கும் காமராஜர் அணையிலிருந்து திண்டுக்கல்லுக்கு 60 ஆண்டுகளுக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுமட்டுமின்றி சின்னாளபட்டி, சித்தையன்கோட்டை பேரூராட்சிகள், ஆத்தூர், சீவல்சரகு உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கும் இந்த அணையின் உதவியுடன் குடிநீர் வழங்கப்படுகிறது.

தற்போது அணையின் நீர்மட்டம் பூஜ்ஜியத்திற்கும் குறைவாக உள்ளதால் திண்டுக்கல் நகராட்சி மற்றும் சித்தையன் கோட்டை உள்ளிட்ட பேரூராட்சி, கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அணை முழு கொள்ளவை எட்டியது. அதன்பின்பு போதிய மழை இல்லாததாலும், கோடை வெயில் காரணமாகவும் அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து தற்போதைய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பருவமழை தொடங்கி போதிய அளவில் பெய்தால் மட்டுமே, அணைக்கு நீர் வரத்து இருக்கும் என பொதுப்பணித்துறையினர் கூறியுள்ளனர்.

த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் புறக்கணிப்பால்

# மதுரை விழாவில் வெளிநடப்பு செய்த அமைச்சர் நிர்மல்குமார்!

## மேடை ஏறிய உடனே வெளியேறினார்!

மதுரை, ஜூலை 6 -

மதுரையில் அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல்குமார் பங்கேற்ற நிகழ்ச்சியில் த.வெ.க. எம்.எல்.ஏ.க்களான கல்லாணை மற்றும் கோபிசன் ஆகியோர் பங்கேற்கவில்லை. இதனால் டென்ஷனான அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல்குமார் மேடையில் ஏறி இருக்கையில் கூட அமராமல் வெளியேறினார். இதனால் மதுரை மாவட்ட தவெக நிர்வாகிகள் மத்தியில் மிகப்பெரிய மோதல் வெடித்துள்ளதாக பேச்சுகள் எழுந்துள்ளன.

மதுரையில் மருத்துவக் கல்லூரியில் அரசு ஆய்வக நுட்புனர் சங்க வெள்ளி விழா ஆண்டு மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் வந்திருந்தார். ஆனால் அழைப்பிதழில் எம்.எல்.ஏ.க்களான கல்லாணை மற்றும் கோபிசன் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன. அவர்கள் வரவில்லை.

இதனால் டென்ஷனான அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், மேடையில் ஏறிய அடுத்த நொடியே இருக்கையில் கூட அமராமல் அப்படியே கீழே வந்து நிகழ்ச்சியில் பங்கேற்காமல் புறப்பட்டு சென்றார். இந்த சம்பவம் மதுரை மாவட்ட த.வெ.க.வினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் மதுரை மாவட்ட பொறுப்பு அமைச்சராக சிடிஆர் நிர்மல்குமார் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், த.வெ.க. ஆட்சி அமைத்த போது, கல்லாணை அல்லது தங்கப்பாண்டி ஆகியோரில் ஒருவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இருவருமே அமைச்சரவையில் இடம் பெறவில்லை. இதனால் சிடிஆர் நிர்மல்குமார் மீது இருதரப்புமே அதிருப்தியில் இருப்பதாக சொல்லப்பட்டு வந்தது.

இதன் காரணமாக அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமாருடன் மோதல் போக்கு ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனால் கல்லாணை தரப்பில் நிகழ்ச்சிக்கு வராததிற்கு பிற காரணங்கள் சொல்லப் படுகிறது.